**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS.158/2021

06.02.2026.

PW- 1

**வா.சா.1. பாலகிருஷ்ணன், த/பெ.முருயைன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

சேஷாய் சாஸ்திரிக்கு வழக்கு சொத்து எப்படி கிடைத்தது என்று எனது வழக்குரையிலோ நிருபண பிரமாண பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் - சரிதான். வழக்கு சொத்திற்கு வில்லங்க சான்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் - இல்லை. பிரதிவாதியின் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் - படித்து பார்த்தேன். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி என்பவர் யார் என்றால் - சேஷாய் சாஸ்திரியின் தம்பி ஆவார். சேஷாய் மற்றும் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்ட விவரம் தெரியுமா என்றால் - தெரியும். இந்த விவரத்தினை எனது நிருபண பிரமாண பத்திரத்திலோ வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் - சரிதான். வழக்குரையில் தாக்கல் செய்துள்ள சந்தை மதிப்பு ஆவணமானது 08.08.2020 ல் பெறப்பட்டது என்றால் - சரிதான். அ பதிவேடு, கிஸ்தி ரசீது, பட்டா (இணையதள நகல்) ஆகியவை 09.08.2020 க்கு முந்தைய நாள் எடுக்கப்பட்டது என்றால் - சரிதான். தொடர்ந்து பிரச்சினை நடந்து வருகிறது. இந்த பிரச்சினை தொடர்பாக காவல்நிலையத்தில் புகாரோ, பிரதிவாதிக்கு வழக்கறிஞர் முன்னறிவிப்போ கொடுக்கவில்லை என்றால் - காவல்நிலையம் சென்றேன் சிவில் வழக்கு என்பதால் புகார் எடுக்கவில்லை. இந்த விவரத்தினை எனது நிருபண பிரமாண பத்திரத்திலோ வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். பிரதிவாதிகள் எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாக தாவா சொத்தை நில அளவீடு செய்து பார்த்தேனா என்றால் - நான் செய்யவில்லை. பிரதிவாதிகள் தான் செய்து பார்த்தார்கள். இந்த விவரத்தினை எனது நிருபண பிரமாண பத்திரத்திலோ வழக்குரையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான். வழக்கு சொத்தானது உட்பிரிவு செய்யப்படாமல் முழு எண்ணாக தான் உள்ளது என்றால் - சரிதான். வழக்கு சொத்து வாங்கியதிலிருந்து எனது அனுபவத்தில் இருந்து வருவதை காட்டுவதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். தாவா சொத்தை கிருஷ்ணமூரத்தி சாஸ்திரிடமிருந்து நான் கிரயம் பெறவில்லை என்பதால் நான் வாங்கிய கிரயம் முழுமையான கிரயம் ஆகாது என்றால் - சரியல்ல. 01.05.2020, 09.08.2020 ஆகிய தேதிகளில் பிரச்சினை நடந்தது தொடர்பாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். பிரதிவாதிகள் அவர்கள் கிரயம் வாங்கிய சொத்தை தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் அந்த சொத்தை நான் அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யான காரணத்தை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. முழு சொத்திலும் சொத்திலும் விளம்புகை பரிகாரம் கோரியுள்ள நான், கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் - அவர்களுக்கும் சொத்திற்கும் சம்மந்தம் இல்லை என்பதால் சேர்க்கவில்லை. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி அவரது தம்பி சேஷாய் சாஸ்திரிக்கு சொத்தை கொடுத்தது தொடர்பாக நான் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை

என்றால் - சரிதான். நான் உண்மையான உரிமையாளர் இல்லை என்றாலும் அசல் வழக்கில் தரப்பினர்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு பிழையுடையது என்றால் - சரியல்ல. பிரதிவாதிகளின் சொத்தை அவர்கள் கிரயம் பெற்ற காலத்திலிருந்து உள்ள அமைப்புகளுடன் இதுநாள்வரை அனுபவம் செய்து வருகிற விவரம் எனக்கு தெரிந்து இந்த வழக்கிற்காக பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. வழக்கு சொத்து விவரங்களில் குறிப்பிட்டுள்ள மரங்கள் தானாக வளரும் மரங்கள் என்றும் வழக்கிற்காக நான் பயிரிட்ட மரங்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து குறிப்பிட்டு எந்த விவரங்களும் சொல்லாத பட்சத்தில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் - சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமும் தவறானது என்றால் - சரியல்ல. நான் எனது நிருபண வாக்குமூலம் மற்றும் அசல் வழக்குரையில் கூறியுள்ளது போன்று எந்த சம்பவமும் நடைப்பெறவில்லை என்றாலும் பொய்யான காரணங்களை கூறி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் - சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,

சார்பு நீதிபதி

மன்னார்குடி.